முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் தை மாதம் 22 திகதி முதல்

சுபகிருது வருடம் தை மாதம் 29 திகதி வரை

(05.02.2023 ஞாயிறு முதல் 12.02.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானக்கனலை உலகெலாம் மூட்டி
   ஞானிகளை வணங்க வழிகாட்டி
   தானதரும மகா சக்தியூட்டி
   தவசியாக அருளும் அரங்கஞானியே
2. ஞானியே உமைபோற்றி அகத்தியனும்
   நாட்டிடுவேன் இந்தியா தமிழகத்தில்
   இனிமேலாய் சுபகிருது கலைதிங்களில்
   இருபானீர் திகதிமேல் இருபான்நவ திகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன்குறித்த ஆசியுரைப்பேன்
   திரைமறைவாய் தொடருகின்ற நலமிலா
   துறைவாரிய அரசின் ஊழல் முறை
4. முறைகளெல்லாம் சடுதி முடிவுகண்டு
   முழுமைபட தரும ஞானவழியில்
   குறைகள் அனைத்தும் களைந்து
   குறிப்பாக பணிநியமன வாய்ப்புகள்
5. வாய்ப்புகள் தகுதி அடிப்படையில்
   வாய்மைபட நிறுவப்படவே இனி
   மெய்யான அதிகார வர்க்கங்கள்
   முழுமைபட எல்லாத் துறையிலும் நிரம்பி
6. நிரம்பியே உண்மைபட சேவை
   நிலவுலகே மெச்ச வளர்ச்சியாக
   வரம்புக்கு மேலான உபரியாக
   வளர்ந்து பொருளாதார பலம் பெருகும்
7. பெருகவே பெருந்தன்மைபடவே
   பொது வாழ்வுக்கு அர்ப்பணித்த
   நிருவாகத் தலைமைகள் எல்லாம்
   நீதி நெறி மீறா நடந்து கொள்ள
8. கொள்ளவே மேல்கீழ் என
   குறைகாணா சகல சேவகர்களும்
   வல்லமைபட நேருமைபட பணியாற்றி
   வளர்ச்சிக்காண வழிகள் கிட்டும்

9. கிட்டவே இந்தவித மாற்றத்தை
குருமார்கள் கொண்டு இறைவன்
சட்டமாக ஞானமாக நடத்தஇருக்க
சரணாகதிதனை அரங்கமகான் வழி
10. வழிகண்டு ஆளுமைகள் அதிகாரிகள்
வணங்கி வந்து ஆசிதனை ஏற்க
பழிபாவச் செயல்கள் யாவும்விலகி
பரோபகாரச் சிந்தை பெருகி
11. பெருகியே இந்தியா தமிழகம் முழுக்க
பெருந்தன்மை கொண்ட ஆளுமையாக
தருமஞானம் நிறைந்த ஆட்சிநடத்தி
தரணியே பின்பற்றும் வகையுமாகும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் தை மாதம் 22ம் நாள் 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 29ம் நாள் 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலகமெங்கும் உள்ள மக்களிடத்து ஞானத்தின் அற்புதங்களை உணர்த்தி மக்களிடத்து ஞானக் கனலை மூட்டி ஞானம் அடைய வேண்டி அவர்களை முற்றுப் பெற்ற ஞானிகளை வணங்கச் செய்தும் ஜீவதயவே ஞானவீட்டின் திறவுகோல் என்பதை அறியச் செய்து மக்களை தானதருமங்களை செய்திடச் செய்தும் அளவிலா தானதருமங்களை குடில் அமைத்து உலகினில் செய்து தானதரும பலத்தை கூட்டியும் மக்களுக்கு அருள்பாலித்து காக்கும் மகாஞான தவசியாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்கமகா ஞானியே உம்மைப் போற்றி வணங்கியே சுபகிருது வருடம் தை மாதம் 22ம் நாள் 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 29ம் நாள் 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் இந்தியா தமிழகத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

திரைமறைவாக நடக்கின்ற ஊழல்கள் எல்லாம் கட்டுப்படுத்துவதுடன் அரசின் ஒவ்வொரு துறைகளிலும் நடக்கும் நேர்மையற்ற செயல்பாடுகள் எல்லாம் இனி கட்டுப்படுத்தப்பட வேண்டும். எல்லா துறைகளும் தருமஞான நெறியில் நடந்து அவற்றில் உள்ள குறைகள் எல்லாம் களைந்து செயல்பட வேண்டும்.

குறிப்பாக அரசு பணி நியமனங்களிலே உள்ள வாய்ப்புகள் எல்லாம் தகுதி அடிப்படையில் உண்டாக்கப்பட்டு அதிகாரிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டால் உண்மையுள்ள தகுதியுள்ள அதிகாரிகள் எல்லா துறைகளிலும் அதிகமாகி உண்மையும், சேவையும் நிறைந்தவர்களாக ஆகி இந்த பூவுலகமே மெச்சும்படியாக அரசு துறைகள் வளர்ச்சி அடைந்து இலக்கைவிட அதிக வளர்ச்சியை எல்லா துறைகளும் அடைந்து உபரியாகி பொருளாதாரம் பெருகி நாடெங்கும் வலுவான பொருளாதார சூழல் பெருகும்.

அரசு துறை சார்ந்த அனைவரும் பெருந்தன்மைபட நடப்பதுடன் அவரவரும் தம்மை பொது வாழ்விற்கென அர்ப்பணித்தும் நீதிநெறி மீறாது நடந்து கொள்ள மேலதிகாரி, கீழ்அதிகாரி,

ஊழியர்கள் என அனைவரும் நேர்மையுடன் நடந்து கொள்ள நாட்டின் வளர்ச்சிக்கான அனைத்து வாய்ப்புகளும் கிடைக்குமப்பா.

இப்படிப்பட்ட மாற்றங்களை எல்லாம்வல்ல கடவுளே தகுதியுள்ள குருமார்களைக் கொண்டு தர்மத்தின் வழியிலே சட்டமுன் வரைவுகளாக கொள்கைகளாக வெளிப்படுத்த இருக்கின்ற படியினாலே உண்மை ஞானம் போதிக்கின்ற ஞானகுரு தர்மத்தின் வழி சொல்லும் மகாகுரு அரங்க மகான் கூறும் தயவு நெறியான சுத்தசன்மார்க்க நெறியினை அரசு பதவி வகிக்கும் அதிகாரிகள் ஏற்று நடக்க இதுவரை அவர்கள் நாட்டினில் நிகழ்ந்த பழிபாவங்கள் எல்லாம் விலகி நாடெங்கும் பரோபகாரம் பெருகி இந்தியா தமிழகம் முழுதும் பெருந்தன்மையான ஆளுமைகள் உருவாகி தருமஞானம் மிகுந்த ஆட்சி உருவாகி இந்த உலகமே பின்பற்றக்கூடிய அற்புத ஆட்சியாக ஆட்சிமுறை சிறந்து நாட்டினில் ஞானஆட்சி உருவாகிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–